**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.243/2022**

**சாட்சியின் சான்றுரை PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | கஸ்தூரி | வட்டம் | - | |
| க/பெ | - | முருகன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

05.10.2023 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.
வாதி சாட்சி 1 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு 42 வயது ஆகிறது. என் தாத்தா ஆனந்த படையாட்சி என்றால் சரிதான். என் தாத்தா சொத்து கிரையம் வாங்கும் போது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் 4வது பத்தியில் நானும் மற்ற பிரதிவாதிகளும் கூட்டாக சம்பாதித்து எனது பாட்டனார் பெயரில் சொத்து வாங்கினோம் என்று சொல்வது தவறு என்றால் சரிதான். ஆனந்த படையாட்சி 13.06.1956ல் அவர் பெயரில் நேரடியாக சிங்கார முதலியாரிடம் இருந்து கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். சாட்சி தற்போது அது பூர்விக நிலத்திலிருந்து வந்த வருமானத்தில் வாங்கப்பட்டது என்கிறார். ஆனந்த படையாட்சிக்கு பூர்விக சொத்து இருந்தது என்பதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முதல் பிரதிவாதி எனது அப்பா. அவர் பழனி என்பவருக்கு ஒரு பொது அதிகாரம் கொடுத்தார் அது நாங்கள் அனைவரும் சேர்ந்து கொடுத்தது. அதில் நான் ஒரு நபராக சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் நாங்கள் யாரும் போடவில்லை. நாங்கள் அனைவரும் பொது அதிகாரம் கொடுத்தோம் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன்

என்றால் சரியல்ல. நான் பொது அதிகார பத்திரம் படித்துப்பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதில் என் அப்பாவிற்கு என் தாத்தா தான செட்டில்மண்ட் எழுதி வைத்தார் என்றும் அதில் தான் பவர் கொடுக்கப்பட்டது என்று எழுதியுள்ளது என்றால் சரிதான். என் தாத்தா அவருடைய தனிப்பட்ட சொத்து தான் என் அப்பாவிற்கு எழுதினார் என்றும் அதை தான் என் தந்தையார் பவர் எழுதினாா ்என்றால் சரியல்ல. அந்த சொத்து பூர்விக சொத்திலிருந்து வந்த வருமானத்தை வைத்து வாங்கியது. பூர்விக வருமானத்திலிருந்து வாங்கியது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொது அதிகார பத்திரத்தில் பணம் என் தந்தையார் வாங்கியதாக வாசகம் இல்லை என்றால் சரிதான். நான் பவர் எழுதிய பழனி என்பவர் சொத்தை விற்று என் தந்தையாருக்கு கொடுத்தார் என்றும் அந்த பணத்தை என் அண்ணனுக்கு கொடுத்து அதன் மூலம் தான் சொத்து வாங்கப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றும் அவ்வாறு சொத்து விற்றதற்கான பத்திரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தந்தை சொத்தை விற்று தான் 3ம் பிரதிவாதி சொத்து வாங்கினார் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி சொத்து வாங்குவதற்கு என் தந்தையார் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை கூட்டாக அனுபவித்தேன் என்று சொல்கிறேன் என்றும் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் என் அண்ணனை நம்பி தான் வாங்கினோம். அவ்வாறு வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் ஜெயச்சந்திரன் கொத்தனார் வேலைக்கு செல்வார் என்றால் ஏதாவது ஒரு நாள் தான் செல்வார். திருமணத்திற்கு பிறகு பாதி நாட்கள் செல்கிறார். 24.03.2011ல் 3ம் பிரதிவாதி கொத்தனார் வேலை செய்தும், மேலும் நிலங்களில் பயிர் வைத்தும், தனது மனைவியின் நகையை வைத்தும் ரூ.7 லட்சத்திற்கு தாவா சொத்தை வாங்கினார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாங்கிய நாளிலிருந்து 3ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றும்

அவர் பெயரில் 566 என்ற எண்ணில் பட்டா வழங்கப்பட்டது என்றாலும் அவர் பெயரில் மின்சார இணைப்பு உள்ளது என்றாலும் அவர் பெயர் சொத்து வாங்கியதால் அவ்வாறு உள்ளது. அது அவருடைய தனிபட்ட சொத்து என்றும் அவர் எந்த காலத்திலும் சொத்தை கூட்டாக அனுபவிக்கவில்லை என்றும் 3ம் பிரதிவாதியை தவிற வேறு யாரும் வழக்கு சொத்தை அனுபவிக்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல கூட்டாக சம்பாதித்து சொத்தை வாங்கினோம் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. பூர்விக நிலத்திலிருந்து வந்த வருமானத்தில் வாங்கினோம். வழக்கு சொத்து பிரித்து கொடுக்கிறேன் என்று 3ம் பிரதிவாதி எப்போது ஒத்துக்கொண்டார் என்றால் நிலம் வாங்கும் போதே ஒத்துக்கொண்டார். யார் முன்னிலையில் ஒத்துக்கொண்டார் என்றால் எனது பெற்றோர் முன்னிலையில் ஒத்துக்கொண்டார். அவ்வாறு சொத்து பிரித்துக்கொடுக்கிறேன் என்று கிரையம் வாங்கும் போது சொன்னார் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாகம் எந்த தேதி, மாதம், வருடம் கேட்டேன் என்றால் என் அம்மா இறந்த பிறகு 21,22ம் வருடத்தில் பேச ஆரம்பித்தோம். வழக்கு சொத்தை 3ம் பிரதிவாதி சென்ட்ரல் வங்கியில் ரூ.3 லட்சம் கடன் வாங்கினார் என்றால் அதை நாங்கள் பொதுவில் பைப் லைனுக்காக வாங்கினோம். அரசாங்கத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. அவர் வாங்கிய கடனை 04.08.2021ல் பைசல் செய்தார் என்றால் சரியல்ல,. கடன் கட்டாததால் ரூ.25,000/- கட்டி பத்திரம் வாங்கிகொள்ள சொன்னார்கள். பொதுவாக கடன் வாங்கினோம் என்று சொல்கிறேன் என்றும் கடன் பத்திரத்தில் நானோ என் அப்பாவோ கையெழுத்து போட்டோமா என்றால் இல்லை. அண்ணன் பெயரில் வாங்கியதால் அவர் மட்டும் போட்டார். இது அவருடைய தனிப்பட்ட சொத்து, அவர் நிலத்தை வைத்து அவர் கடன் வாங்கினார் என்றால் இல்லை. எனக்கு 2006ல் திருமணம் நடந்தது என்றால் சரிதான். புதுச்சேரி தேங்காய் திட்டு என்ற இடத்தில் என்னை திருமணம் செய்து

கொடுத்தார்கள் என்றால் சரிதான். திருமண நாளிலிருந்து தற்போது வரை என் கணவர் வீட்டில் இருக்கிறேன் என்றால் சரிதான். என் கணவர் ஆன்லைன் சூதாட்டம் விளையாடி பணத்தை இழந்துவிட்டு இந்த வழக்கில் என்னை தூண்டிவிட்டு வழக்கு போட்டுள்ளார் என்றால் தவறு. பிரதிவாதி சொத்து வாங்கி 10 வருடம் கழித்து தான் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். அவர் வழக்கு சொத்து வாங்கியதே எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சகோதரரின் சொத்தில் பாகம் கேட்க சட்டப்படி உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான் கூட்டுக்குடும்ப சொத்தில் தான் உரிமை கேட்கிறேன். நான் புதுச்சேரியில் ஏற்கனவே அசல் வழக்கு எண்.300/2022 என்று பாகம் கேட்டு வழக்கு போட்டு அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அங்கு ஒரு பாகம் கேட்டு இங்கும் மீண்டும் அதே தீர்வை கேட்டு இங்கு ஒரு பாக வழக்கு போடுவது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இங்கு எனக்கு கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். அதனால் இடத்தை மட்டும் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். பாகப்பிரிவினை வழக்கை இரண்டு இடத்திலும் போட இயலாது என்றும் இவ்வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி நீதிமன்றத்தில் இழுத்தடித்து மன உளைச்சல் ஏற்படுத்தியதால் அவருக்கு நான் ரூ.10000/- இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.